DINAKARAN

28 SEP 2021

PAGE 11

# புதுவை பல்கலையில் சிறுவர் கால்பந்து போட்டி



புதுவை பல்கலைக்கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பதக்கம் வழங்கப்பட்டது.

**புதுச்சேரி, செப். 28:** புதுவை பல்கலைகழகம் சுதந்திர இந்தியா தகுதி ஓட்டம் 2.0 தொடர்ச்சியாக, 15 வயதுக்கு உட்பட்ட பல்கலைகழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கால்பந்து போட்டி திருவள்ளுவர் விளையாட்டு திடலில் நடந்தது. இப்போட்டியை விளையாட்டு இயக்குனரகம் மற்றும் விளையாட்டு துறையும் இணைந்து நடத்தியது. கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள் இயக்குநரகத்தின் இயக்குனர் ராஜீவ் ஜெயின் போட்டியை துவக்கி வைத்தார். இறுதியாக வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினார். முன்னதாக உடற்கல்வி இயக்குனர் வசந்தி வரவேற்றார். இதற்கான ஏற்பாடுகளை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் இளையராஜா, பிரவீன் ஆகியோர்கள் ஆகியோர் செய்திருந்தனர். உடற்கல்வி பேராசிரியர் சுல்தானா நன்றி கூறினார். இதில் பேராசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் பார்வையாளராக கலந்துகொண்டனர்.